## அரக்கோணம் நகராட்சி
## சாதாரண மன்ற கூட்ட அறிவிப்பு

கூட்ட எண்.50 நாள்.26.11.2019.

பொருள் : சாதாரண மன்றக் கூட்டம் – அரக்கோணம் நகராட்சி – நாள் 29.11.2019 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கூட்டம் நடைபெறுதல் – சம்மந்தமாக.

*****

அரக்கோணம் நகராட்சி 29.11.2019 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ள சாதாரண மன்ற கூட்டத்தில் கொண்டு வரப்படவுள்ள மன்றப்பொருள்கள் விவரம்.

ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்
அரக்கோணம் நகராட்சி

**பொருள் எண் :01**

நகராட்சி ஆணையாளர் (ம) நகராட்சி பொறியாளர் அவர்களின் அக்டோபர்/2019 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**பொருள் எண் :02**

தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2019–20ஆம் ஆண்டின் கீழ் அரக்கோணம் நகராட்சியில் கீழ்காணும் சாலைப்பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி 07.11.2019 அன்று கோரப்பட்டு தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் சிப்பம் –1 மற்றும் சிப்பம்–3க்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தகுதி பெற்றதை தொடர்ந்து 14.11.2019 அன்று விலைவிகித ஒப்பந்தப்புள்ளிகள் (Price Bid) திறக்கப்பட்டதில் பின்வருமாறு வரப்பெற்றுள்ளது.

| சிப்பம் | gâæ‹ bga® | kÂ¥ÕL y£r¤Âš | x¥g<sup>a</sup>jjhu® bga® | x¥g<sup>a</sup>j¥òÿë rjÅj« |
|---|---|---|---|---|
| 1/ | 2/ | 3/ | 4 | 5 |
| 1 | **Providing CC surface Road at Avildhar Munusamy st,coun.Janakiraman Street, Selva vinayagar koil Street, Ganesh Nagar Main Road, Kumaran Street, Bharathisan Street, Vanjinathan Street, Meejur Subramanian 1st Street, Meejur Subramanian 2nd Street Ward-01,Ganesh nagar 2nd st Ward-02, Vallalar Street, Sastri Nagar, Elango Street Ward 03, Town Hall 3rd Street Ward 06, Irattai malai srinivasan Street, Meenambal sivaraj Street, Sabanayakar sivashanmugam Street, Athipattan Street, Ward-09.Jaffer mastan darga Street Ward-10 in Arakkonam Municiapality, Package-1** | **200.00** | திரு.எஸ்.பாஸ்கரன் | 4.11% மதிப்பீட்டை விட அதிகம் |
| | | | திரு.கே.ராமமூர்த்தி | 5.24% மதிப்பீட்டை விட அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 2. | **Providing CC surface Road at Bajanai koil Street ,Rajabathar Street Ward-11, Vethachalam Street Ward-13, Manickam Street Ward-14, HC kuppusamy Street Ward-15,Thiruvallur Street, Milk society koil Street Ward-16,Balasubramanian koil Street, Kannan Flour Mill,Mettu st Ward-17, Sarojini Street Ward-18, Dharmaraja Koil Street, Murugappan Street, Subburayan Street Ward-18, Sanathiamman koil Street, Othavadai Street, Srinivasan Street Ward-19, Narasimman Street, Karpaga pillaiyar koil Street, Ward-20,Thiyagi chinnasamy Street, in Arakkonam Municipality. Package-2** | **200.00** | ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் பெறப்படவில்லை | |
| 3. | **Providing CC surface Road at Annai sivagami Street Ward-21,ABM church 1st Street, ABM church 2nd st,ABM church 3rd Street, ABM church 4th Street, ABM chrch 5th Street Ward-24 Pole Street, Pole Lane Street Ward-29,Gurusamy Street Ward-30, Pillaiyar koil Street Ward-34, Munusamy Street ward 36in Arakkonam Municipality. Package-3** | **100.00** | திரு.எஸ்.பாஸ்கரன் | 5.29% மதிப்பீட்டை விட அதிகம் |
| | | | திரு.கே.ராமமூர்த்தி | 4.17% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் சிப்பம் – IIக்கு ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்பெறவில்லை. மேலும் சிப்பம் – I , மற்றும் சிப்பம் – III க்கான வரப்பெற்ற இரு விலைவிகித ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டை விட அதிகமாக உள்ளதால் அதில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள

1. சிப்பம் –I திரு.எஸ்.பாஸ்கரன் – 4.11%
2. சிப்பம் –III திரு.கே.ராமமூர்த்தி – 4.17%

மேற்படி சிப்பம் –I ஒப்பந்ததாரர் திரு.எஸ்.பாஸ்கரன் மற்றும் சிப்பம் – III ஒப்பந்ததாரர் திரு.கே.ராமமூர்த்தி அவர்களுக்கும் ஒப்பந்தப்புள்ளியின் விலைவிகிதத்தை குறைத்து வழங்குமாறு கடந்த 14.11.2018 அன்று Negotiation கடிதம் அனுப்பப்பட்டு கேட்டுக்கொண்டதன் பேரில் ஒப்பந்ததாரர் திரு.எஸ்.பாஸ்கரன் மற்றும் திரு.கே.ராமமூர்த்தி அவர்களின் 15.11.2019ம் தேதிய கடிதத்தில் கீழ்க்கண்ட விலை விகிதத்தில் பணிகளை செய்ய ஒப்புதல் அளித்துள்ளார்.

| பணி | ஒப்பந்ததாரர் | மதிப்பட்டை விட அதிகம், | குறைத்து தர ஒப்புதல் அளித்தது | தற்சமயம் உள்ள விலை விகிதம் மதிப்பட்டை விட அதிகம் |
|---|---|---|---|---|
| சிப்பம்–1 | திரு.எஸ்.பாஸ்கரன் | 4.11% | ஏதுமில்லை | 4.11% |
| சிப்பம்–3 | திரு.கே.ராமமூர்த்தி | 4.17% | ஏதுமில்லை | 4.17% |

மேற்படி சிப்பம்–1 மற்றும் சிப்பம்–3 வரப்பெற்ற ஒப்பந்ததாரரின் ஒத்திசைவு கடிதத்தின் படி சிப்பம்–1 திரு.எஸ்.பாஸ்கரன் 4.11% மதிப்பட்டை விட அதிகம், சிப்பம்–2 திரு.கே.ராமமூர்த்தி 4.17% மதிப்பட்டை விட அதிகம் என முன்னர் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதத்தில் பணியினை செய்ய உள்ளதாகவும், சாலை பணிக்கு தேவையான மூலப்பொருள்களின் விலை உயர்வினையும் கருத்தில் கொண்டு, விலைவிகிதத்தினை குறைத்து தர இயலாது என பணியை செய்ய கடிதம் அளித்துள்ளனர். திட்டப்பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டும், காலதாமதத்தையும் தவிர்க்கும் பொருட்டு சிப்பம் –1 மற்றும் சிப்பம் –3 ஏற்கவும், சிப்பம்–2ல் கண்டுள்ள பணிகளுக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கவும், திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி மறு ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம். மேலும், மதிப்பீட்டை விட கூடுதல் விலைப்புள்ளி அளித்துள்ள தொகையினை பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.1217/2019/இ1)**

**பொருள் எண் :03**

அரக்கோணம் நகராட்சியில் துப்புரவு பணி மேற்பார்வையாளராக பணிபுரியும் திருமதி.கலைமணி என்பவர் தனது குடும்ப சூழ்நிலை காரணமாக திருப்பத்தூர் நகராட்சியில் காலியாக உள்ள துப்புரவு பணி மேற்பார்வையாளர் பணியிடத்திற்கு பணியிடை மாறுதல் செய்ய ஆவணம் செய்து தருமாறு கோரியுள்ளார். எனவே மேற்காணும் பணியாளர் சமர்பித்துள்ள விண்ணப்பத்தினை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண் 1105/எச்1/2019)**

**பொருள் எண் :04**

அரக்கோணம் நகராட்சி மூலமாக வீட்டுமனைகள் அபிவிருத்தி திட்டம் செயல்படுத்த அரசானை எண் 980 நாள் 25.10.1982ல் மத்திய அரசினால் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களை வளர்ச்சியை செய்வதற்கான திட்டத்தின் கடன் வழங்கப்பட்டு கீழ்கண்டவாறு நடைமுறைப்படுத்தப்பட்டது.

அரக்கோணம் தாலுக்கா, காவனூர் கிராம சர்வே எண். 328/2 –ல் 35.60 ஏக்கர் பரப்பளவுள்ள அரசாங்க புறம்போக்கு இடத்தினை நிலக்கிரயம் செலுத்தி அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்டு, முதல் கட்டமாக (Phase-I) 483 மனைகள் வருவாய் பிரிவினருக்கு தகுந்தவாறு வடிவமைக்கப்பட்டு, உத்தேச விற்பனை விலை நிர்ணயம் செய்து மனைகளை குலுக்கல் முறையில் மனைகள் ஒதுக்கீடு செய்து மனையின் விற்பனை விலையில் 1/4 பங்கு தொகை முதல் தவனைத் தொகையாக செலுத்தியும் மீதியுள்ள தொகையினை வருவாய் பிரிவினருக்கு தகுந்தவாறு தவனை முறையில் செலுத்தவும் அறிவுறுத்தப்பட்டு மனைகளை மேற்கண்டவாறு ஒதுக்கீடு செய்யபப்பட்டுள்ளது.

இந்நகரமன்றதீர்மானம் எண் 2952 நாள் 26.05.2006 ன்படி 31.03.2006–ல் வட்டி விகிதங்கள் கணக்கீடு செய்து மனையின் விற்பனை விலையினை மாற்றம் செய்தும், ஏற்கனவே முழுத்தொகை செலுத்தியவர்கள் மிகுதி தொகை செலுத்தவும், மற்றவர்கள் அசல், வட்டி மற்றும் கூடுதல் தொகைகளை கணக்கீடு செய்து செலுத்த கோரி மனை ஒதுக்கீட்டார்களுக்கு இவ்வலுவலக ந.க.எண் 8172/1988/எப்1 நாள் : 31.05.2006 ல் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது.

மேலும் உத்தேச விற்பனை விலை ஒரு சதுர அடிக்கு ரூ.10.42 என திருத்தியமைக்கப்பட்டதை தொடர்ந்து, தணிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள வழிக்காட்டுதலின் படியும், நிர்வாக ஆலோசனையின்படியும் மனை ஒதுக்கீட்டாளர்களுக்கு பத்திர பதிவு செய்து தர நடவடிக்கை மேற்கொண்ட போது வழிகாட்டுதல் மதிப்பீடு மேற்படி இடத்திற்கு ரூ.0/– என உள்ளதாக தெரிவித்து பத்திர பதிவு செய்ய இயலாது என சார்பதிவாளர் அலுவலகத்தில்

தெரிவிக்கப்பட்டது. எனவே மேற்படி இடத்திற்கு வழிகாட்டுதல் மதிப்பீடு நிர்ணயம் செய்து வழங்க கோரியுள்ளதற்கு சார் பதிவாளர் தமது 09.12.2009ம் தேதிய கடிதத்தில் வழிகாட்டு மதிப்பீடு ஒரு சதுர அடிக்கு ரூ.46/– என நிர்ணயம் செய்து வழங்கப்பட்டது. எனவே ஒரு சதுர அடி ரூ.46/–என்ற வீதத்தில் தொகை செலுத்தப்பட்டவர்களுக்கு மட்டும் பத்திர பதிவு செய்து வழங்கப்பட்டுள்ளது. மேலும் தொடர்ந்து பத்திர பதிவு செய்ய தவறிய நபர்களுக்கு இந்நகர் மன்ற தீர்மானம் எண் 1389 நாள் 28.01.2010ல் ஒப்புதல் பெற்று இவ்வலுவலக ந.க.எண் 8172/88/எப்1 நாள் 10.05.2010ன்படி 30 நாட்களுக்குள் ரூ.46/–க்கான வித்தியாச தொகையை செலுத்தி பத்திரப்பதிவு செய்து மனையை பெற்றுக் கொள்ளுமாறும் தவறும் பட்சத்தில் வட்டியுடன் செலுத்த நேரிடும் என அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. எனவே உரிய காலத்திற்குள் பணம் செலுத்தாதவர்களிடம் இருந்து வட்டியை வசூலித்துக் கொள்ள இந்நகர் மன்ற தீர்மானம் எண் 1975 நாள் 16.09.2011ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் வழிகாட்டி மதிப்பு 2 நீர் இணை சார்பதிவாளர் அரக்கோணம் அவர்களின் கடிதம் எண் 80/12 நாள் 10.04.2012ல் ஒரு சதுர அடிக்கு ரூ.100/–என தெரிவிக்கப்பட்டுள்ளதால் இனி வரும் காலங்களில் ஒரு சதுர அடிக்கு ரூ.100/– வசூலித்து கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண் 310 நாள் 30.04.2012 ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் 01.04.2012 முதல் வழிகாட்டி மதிப்பீடு முழுத்தொகையும் செலுத்தியுள்ளவர்களுக்கு மட்டும் ஒரு சதுர அடிக்கு ரூ.46/– வீகிதத்தில் பத்திரம் பதிவு செய்து தர நகரமன்ற தீர்மானம் எண் 279 நாள் 30.04.2012ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய வழிகாட்டி மதிப்பீடு குறித்து சார்பதிவாளருக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண் 8172/1988/எப்1 நாள் 30.05.2019ல் கோரப்பட்டதில் 19.06.2019 தேதி முதல் ஒரு சதுர அடிக்கு ரூ.100/– என உள்ளதை 33% வழிகாட்டி மதிப்பு குறைக்கப்பட்டு சதுர அடிக்கு ரூ.67/–என குறைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே ஒரு சதுர அடிக்கு ரூ.46/– வீதம் 31.03.2012 க்குள் நகராட்சியில் பணம் செலுத்தியவர்களுக்கு மட்டும் மேற்கண்ட விலை விகிதத்தில் பத்திரம் பதிவு செய்து தர இந்நகரமன்ற தீர்மானம் எண் 279 நாள் 30.04.2012ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதால், 31.03.2012க்குள் பணம் செலுத்தியவர்களுக்கு மட்டும் பத்திர பதிவு செய்யலாம், மேலும் அதன் பின்னர் நிலுவைத் தொகை வைத்திருக்கும் நபர்களுக்கு ரூ.10.70/– க்கு 01.01.1993 முதல் நடப்பு மாதம் வரை 17% வட்டி கணக்கீடு செய்து தொகை வசூலிக்கவும் மற்றும் ரூ.46/–க்கு 01.10.2011 முதல் நடப்பு நடப்பு மாதம் வரை 17% வட்டி கண்கீடு செய்து வசூக்கவும் மேலும் தற்போதைய வழிகாட்டி மதிப்பீடு ரூ.67/– க்கான வித்தியாசத்தொகை கணக்கீடு செய்து வசூலித்துக் கொள்ளவும் மற்றும் பத்திர பதிவு செய்து தரவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : நகராட்சிக்கு நிதி இழப்பு இன்றி தொகையை வசூலிக்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.**

**(ந.க.எண் 8172/1988/எப்1 )**

**பொருள் எண் :05**

அரக்கோணம் நகராட்சி தக்கோலம் தலைமை நீரேற்றும் நிலையம் மற்றும் கல்லாறு தலைமை நீரேற்றும் நிலையங்களில் உள்ள மின்மோட்டார்கள் மற்றும் தலைமை நீரேற்றும் நிலையங்களை பராமரிக்க நகராட்சியில் பணியாளர்கள் இல்லாததால் தனியார் ஆட்களை கொண்டு நீரேற்றும் நிலையங்களை இயக்க 2019–2020ம் ஆண்டுக்கு பணிகள் மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் வேலூர் அவர்கள் 2019–2020ம் ஆண்டுக்கான நிர்ணமிக்கப்பட்ட தினக்சுலி அடிப்படையில் நீரேற்றும் நிலையங்களை இயக்க தோராய மதிப்பீடு ரூ.9.70 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. பொது மக்களுக்கு சீரான குடிநீர் வழங்கவும், குடிநீர், பணியின் அவசியம் கருதியும், மேற்படி வேலைக்கும் பணிக்கான தொகையினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்**

**ந.க.எண் .887/இ1/2018**

**பொருள் எண் :06**

அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான கல்லாறு நீரேற்றும் நிலையம் மற்றும் வின்டர்பேட்டை நீரேற்றும் நிலையம் மூலம் நாளொன்றுக்கு சுமார் **2.00** MLD குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது சோடியம் ஹைப்போ குளோரைடு திரவம் கலந்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் தினசரி வழங்கப்பட்டு வருகிறது. இப்பணி முடிவுறும் நிலையில் உள்ளது. எனவே சோடியம் ஹைப்போ குளோரைடு திரவம் சப்ளை செய்ய மதிப்பீடு ரூ.**9.00** இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது குடிநீர் பணியின் அவசியம் கருதியும், மேற்படி வேலைக்கும் பணிக்கான தொகையினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்**

**ந.க.எண் .887/இ1/2018**

**பொருள் எண் :07**

அரக்கோணம் நகராட்சி அலுவலக மேல்நிலைத் நீர்தேக்க தொட்டி மற்றும் அசோக்நகர் நீர் ஊற்று நிலையம் மூலம் நாளொன்றுக்கு சுமார் **3.00** MLD குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது சோடியம் ஹைப்போ குளோரைடு திரவம் கலந்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் தினசரி வழங்கப்பட்டு வருகிறது. இப்பணி முடிவுறும் நிலையில் உள்ளது. எனவே சோடியம் ஹைப்போ குளோரைடு திரவம் சப்ளை செய்ய மதிப்பீடு ரூ.**9.90** இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது குடிநீர் பணியின் அவசியம் கருதியும், மேற்படி வேலைக்கும் பணிக்கான தொகையினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்**

**ந.க.எண் .887/இ1/2018**

**பொருள் எண் :08**

அரக்கோணம் நகராட்சி பராமரிப்பில் உள்ள போலாட்சியம்மன் பள்ளி கட்டிடம் பழுதடைந்து ஆபத்தான நிலையில் உள்ளதால் அருகில் உள்ள கட்டிடத்தில் தற்காலிக வகுப்பறை ஏற்படுத்தி தர தடுப்புகள் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.75000/—ற்கு கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்**

**ந.க.எண் .887/இ1/2018**

**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**
**அரக்கோணம் நகராட்சி**